Press Release No: 641

Date: 9/6/08

# ஆசிரியர் தேர்வு வாரியம்

கல்லூரிச் சாலை, சென்னை-6

## முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் தெரிவுப் பட்டியலில் தெரிவர் முடிவு நிறுத்திவைக்கப்பட்டவர்களை உரிய ஆவணங்களை முன்னிலைப்படுத்த கோரல் சார்ந்த செய்திக் குறிப்பு

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் பல்வேறு துறைகளுக்குத் தேவையான முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக சென்னை தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து 1:5 என்ற விகிதாச்சாரத்தில் பட்டியல் பெறப்பட்டது. பட்டியலில் கண்டுள்ளவர்களின் சான்றிதழ்களைச் முதன்மைக் கல்வி அலுவலர்களும், மாவட்டக் கல்வி அலுவலர்களும் சரிபார்ப்பு செய்தனர். அவர்கள் செய்த சரிபார்ப்பின் அடிப்படையிலும், புதியதாக வெளியிடப்பட்ட அரசாணையின்படியும் தெரிவு முடிவுகள் தாற்காலிகமாக தயாரிக்கப்பட்டன. தெரிவு முடிவுகளை வெளியிட ஆய்வு செய்த போது தெரிவு பெற்றவர்கள் சிலரின் சான்றிதழ்கள் முறையாக இல்லாமலும், சில சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாமலும் முன்னுரிமைச் சான்றிதழ்கள் உரிய முறையில் அமையாமலும், கல்வித்தகுதிகள் சிலவற்றை உறுதிசெய்ய இயலாமலும் இருப்பதைக் கண்டுபிடிக்கப்பட்டன. எனவே அவர்களின் தெரிவு முடிவுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டன.

தெரிவு முடிவு நிறுத்திவைக்கப்பட்ட தெரிவர்களுக்கு தெரிவு நிறுத்திவைக்கப்பட்ட காரணத்தைத் தெரிவித்து அதனைச் சரிசெய்து அனுப்பத் தகவல்கள் அனுப்பப்படுகின்றன. அவர்கள் நிறுத்திவைக்கப்பட்ட காரணத்தை நிவர்த்திசெய்தபின் தெரிவு பட்டியல்கள் வெளியிடப்படும்.

அவர்கள் தெரிவின் மீது உரிய முடிவு எடுக்கப்படாமல் முன்னுரிமையில் அடுத்தவர்களைத் தெரிவு செய்யப்படல் நியாயமானதாக அமையாது.

எனவே தெரிவு நிறுத்திவைக்கப்பட்டுள்ள நபர்கள் உரிய காரணத்தை நிவர்த்தி செய்யப்படும் போது உடனுக்குடன் அவர்களின் தெரிவு முடிவுகளும் வெளியிடப்படும்.

தலைவருக்காக

வெளியீடு, இயக்குநர்:
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9